<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>
<u>அசல் வழக்கு எண்.15/2022</u>

**2023–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20–ம் நாள் வெள்ளிக் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **திரு. S. தெய்வீகன், உதவியாளர்**, என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நைனாமலை | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : ராமசாமி கவுண்டர் | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :மலையாளப்பட்டி | சமயம் | : |
| சாதி | : | வயது | : 76/2023 |

**முதல் விசாரணை :**

1 (i) நான் இவ்வழக்கில் 2ம் வாதியாவேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக எனக்காகவும் 1ம் வாதிக்காகவும் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். 05.02.1990ம் தேதியிட்டு தாவா சொத்தை அத்தையம்மாளிடமிருந்து நான் கிரையம் பெற்றதற்கான கிரைய பத்திரத்தின் கணினி மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) வாதி தரப்பில் கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.